


# கல்வியே செல்வம்



வாரணாசி எனும் நகரில் ஒரு பணக்காரச் செட்டியார் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் கல்வி கற்காமல். விளையாட்டிலேயே பொழுதைக் கழித்தான். அந்த நகரில் அதேபோன்று இன்னுமொரு செட்டிக் குடும்பமும் வாழ்ந்தது. அவர்களுக்கு ஒரு மகள் இருந்தாள். அவளும் கல்வி கற்காமல் விளையாட்டிலேயே காலத்தைக் கழித்தாள். இரு குடும்பத்தினரும் இணைந்து தம் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தனர். சிறிது காலத்தில் அவர்களின் பெற்றோர் இறந்து விட்டனர்.

இந்த இளம் செட்டித் தம்பதியினர் தம் பெற்றோர் சேர்த்து வைத் திருந்த செல்வங்களை எல்லாம் செலவு செய்து நண்பர்களுடன் வினோதமாகக் காலத்தைக் கழித்தார்கள். சிறிது காலத்தில் அனைத்துச் செல்வங்களும் முடிவடைந்தன. இறுதியில் அவர்கள் தம் வீடுவாசல் சொத்துக்களையும் கூட விற்றனர். இதனால் தம் வயோதிபக் காலத்தில் வாழ்வதற்கு வழியின்றி யாசகம்

செய்தார்கள். இருவரும் ஒரு நாள் ஜேதவனாராமை விகாரைக்குச் சென்றனர். அங்கே சாமனேர பிக்குமார் சிலர் அவர்களுக்கு உணவு வழங்கினார்கள்.



இதைக் கண்ட புத்த பெருமான் ''இளமைப் பருவத்தில் கல்வியை பெறாமலும் சொத்துக்களைத் தேடாமலும் தங்களிடம் இருந்த செல்வங்களை அழித்து விட்டு இவர்கள் இருவரும் யாசகம் செய்வதைப் பாருங்கள்'' என்று இந்தத் ஸ்தோத்திரத்தைப் போதித்தார்.

**அசரித்வா பிரஹ்மச்சரியங்**
**அலத்தா யொப்பனே தனங்**
**ஜிண்ணகொஞ்சாவ ஞாயந்தி**
**கீணமச்சேவ பல்லலே**

## அரும்பதங்கள்
### වදන් පෙළ

| | | |
|---|---|---|
| *1.* பொழுதைக் கழித்தனர் | - | කාලය ගත කළා |
| *(பொழுதைக் கழி)* | | |
| *2.* அழித்துவிட்டு | - | විනාශ කර/ නැති කර |
| *(அழித்துவிடு)* | | |
| *3.* இறுதியில் | - | අවසානයේ |
| *(இறுதி)* | | |
| *4.* கல்விகற்காமல் | - | අධ්‍යාපනය නොලබා |
| *(கல்விகல்)* | | |
| *5.* செட்டியார் | - | සිටුතුමා |
| *6.* செல்வங்கள் | - | ධන සම්පත් |
| *(செல்வம்)* | | |
| *7.* தம்பதியினர் | - | අඹුසැමි යුවළ |
| *8.* வயோதிபர் | - | වැඩිහිටියා |
| *9.* வயோதிப காலத்தில் | - | මහළුවියේ |
| *(வயோதிப காலம்)* | | |
| *10.* இணைந்து | - | එක් වී |
| *(இணை)* | | |
| *11.* வழியின்றி | - | මගක් නැතිව |
| *12.* வாழ்வதற்கு | - | ජීවත්වීමට |
| *(வாழ்)* | | |
| *13.* வைத்திருந்த | - | තබාගෙන සිටි /තැබූ |
| *(வைத்திரு)* | | |
| *14.* இறந்துவிட்டனர் | - | මිය ගියහ |
| *(இறந்துவிடு)* | | |
| *15.* செலவு செய்து | - | වියදම් කොට |
| *(செலவு செய்)* | | |
| *16.* திருமணம் செய்துகொண்டனர் | - | විවාහ වූහ |
| *(திருமணம் செய்)* | | |
| *17.* போதித்தார் | - | දේශනා කළේය |
| *(போதி)* | | |

*18. யாசகம் செய்தார்கள்* - හිඟාකෑවා/සිඟමන් ලැබුවා
*(யாசகம் செய்)*

*19. விற்றனர் (வில்)* - විකුණුවෝය



## செயற்பாடு - 1
## ක්‍රියාකාරකම - 1

**விடை எழுதுக.**
**පිළිතුරු ලියමු.**

1. செட்டிமார் வாழ்ந்த நகரம் எது?

 ______________________________

2. அவர்களது பிள்ளைகள் இழந்த முக்கியமான செல்வம் யாது?

 ______________________________

3. அவர்கள் யாசகம் செய்ததன் காரணம் என்ன?

 ______________________________

4. அவர்களுக்கு உணவு வழங்கியோர் யார்?

 ______________________________

5. இங்கே புத்தபெருமான் தனது போதனையில் எந்தச் செல்வத்தை முக்கியத்துவப்படுத்துகிறார்?

 ______________________________



## செயற்பாடு - 2
## ක්‍රියාකාරකම - 2

**இடைவெளிகளை நிரப்புக.**
හිස්තැන් පුරවන්න.

1. செ ______ வங்கள் *(ள்/ ழ்/ ல்)*
2. உ ______ ள *(ல்/ ள்/ ழ்)*
3. க ______ வி *(ள்/ ழ்/ ல்)*
4. வி ______ யாட்டு *(ழை/ லை/ ளை)*
5. வா ______ ந்து *(ள்/ ழ்/ ல்)*
6. மக ______ க்கு *(லு/ ழு/ ளு)*
7. அவ ______ ம் *(ழு/ லு/ ளு)*
8. கா ______ ம் *(ள/ ல/ ழ)*
9. தி ______ மணம் *(று/ ரு)*
10. பெ ______ றோர் *(ட்/ ற்)*
11. இ ______ வரும் *(று/ ரு)*
12. சே ______ ந்து *(ற்/ ர்)*
13. க ______ ட *(ன்/ ண்)*
14. இ ______ ந்த *(று/ ரு)*
15. இ ______ த *(ந்/ ன்/ ண்)*



## செயற்பாடு - 3
## ක්‍රියාකාරකම - 3

**கீழ்வரும் தமிழ் வாக்கியங்களை சிங்கள மொழியில் மொழிபெயர்த்து எழுதுவோம்.**

**පහත සඳහන් දෙමළ වාක්‍ය සිංහලට පරිවර්තනය කරමු.**

1. வாரணாசி நகரில் பணக்காரச் செட்டியார் ஒருவர் இருந்தார்.

   ______________________________

2. செட்டியாருக்கு ஒரு மகன் இருந்தான்.

   ______________________________

3. அதேபோன்று இன்னுமொரு செட்டிக் குடும்பம் வாழ்ந்தது.

   ______________________________

4. புத்தபகவான் தம்மபத ஸ்தோத்திரத்தை போதித்தார்.

   ______________________________

5. நண்பர்களுடன் வினோதமாக காலத்தைக் கழித்தான்.

   ______________________________

6. சாமனேர பிக்குமார் உணவு வழங்கினார்கள்.

   ______________________________



## செயற்பாடு - 4
## ක්‍රියාකාරකම - 4

**பொருத்தமற்ற சொல்லின் கீழ் கோடிடுக.**
නොගැළපෙන වචනය යටින් ඉරක් අඳින්න.

*1.* வறியவர், பணக்காரர், தனவந்தர், செல்வந்தர்

*2.* சிங்களவர், தமிழர், இஸ்லாம், பறங்கியர்

*3.* இறுதி, தொடக்கம், முடிவு, கடைசி

*4.* நண்பர்கள், சிநேகிதர்கள், மித்திரர்கள், பகைவர்கள்

*5.* சகோதரன், மைந்தன், புத்திரன், மகன்



## செயற்பாடு - 5
## ක්‍රියාකාරකම - 5

**'கல்வியே அழியாத செல்வம்' சொற் தலைப்பின் கீழ் ஒரு கட்டுரை எழுதுங்கள்.**
'අධ්‍යාපනය විනාශ නොවන සම්පත්ය' යන මාතෘකාවෙන් රචනයක් ලියන්න.